மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் கார்த்திகைத்திங்கள் 29 ஆம் நாள்

**இடைநிலை மனு எண் 543/22-ல்**

**அசல் வழக்கு எண். 26/2022**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா மற்றும் முன்சிபி, மற்றும் நகரம், பூக்கொல்லை ரோடு, கதவிலக்கம் 51/24 என்ற முகவரியில் வசித்து வரும் மாரிமுத்து மனைவி, இந்து, வீட்டுக்குடித்தனம், சுமார் 59 வயதுள்ள மகாராணி.

.... மனுதாரர்/1-ம் பிரதிவாதி

**// எதிர் //**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா மற்றும் முன்சிபி, துளசேந்திரபுரம், வடக்கு தெரு, கதவிலக்கம் 2/226 என்ற முகவரியில் வசித்து வரும் லேட்.குருநாதன் மனைவி, வீட்டுக்குடித்தனம் 62 வயதுள்ள கலைச்செல்வி..

...எதிர்மனுதாரர்/வாதி

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா மற்றும் முன்சிபி மற்றும் நகரம், பூக்கொல்லை ரோடு, கதவிலக்கம் 51/24 என்ற முகவரியில் வசித்து வரும் மாரிமுத்து குமாரர், இந்து, சிவமதம் 38 வயதுள்ள குருமூர்த்தி.

2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா மற்றும் முன்சிபி, மற்றும் நகரம், பூக்கொல்லை ரோடு, கதவிலக்கம் 55 பி, என்ற முகவரியில் வசித்து வரும் மாரிமுத்து மகளும், ராஜ்மோகன் மனைவியுமான இந்து, வீட்டுக்குடித்தனம் 36 வயதுள்ள சங்கீதா.

3. திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் தாலுக்கா மற்றும் நீடாமங்கலம் முன்சிபி , காக்கையடி, பிள்ளையார் கோவில் தெரு, கதவிலக்கம் 2/272 என்ற முகவரியில் வசித்து வரும் மாரிமுத்து மகளும் மகேந்திரன் மனைவியுமான, இந்து, வீட்டுக்குடித்தனம் 30 வயதுள்ள உதயசூரியா.

4. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா மற்றும் முன்சிபி, மற்றும் நகரம், பூக்கொல்லை ரோடு, கதவிலக்கம் 51/24 என்ற முகவரியில் வசித்து வரும் மாரிமுத்து மருமகளும் குருமூர்த்தி மனைவியுமான, இந்து, வீட்டுக்குடித்தனம் 32 வயதுள்ள தெய்வானை.

5. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா மற்றும் முன்சிபி, மற்றும் நகரம், பூக்கொல்லை ரோடு, கதவிலக்கம் 51/24 என்ற முகவரியில் வசித்து வரும் மாரிமுத்து மருமகனும் செல்வராஜ் மகனுமான, இந்து, சிவமதம், 45 வயதுள்ள ராஜ்மோகன்.

6. திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் தாலுக்கா மற்றும் நீடாமங்கலம் முன்சிபி, காக்கையடி, பிள்ளையார் கோவில் தெரு, கதவிலக்கம் 2/272 என்ற முகவரியில் வசித்து வரும் மாரிமுத்து மருமகனும் வீரப்பன் மகனுமான, இந்து, சிவமதம், 35 வயதுள்ள மகேந்திரன்.

7. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா மற்றும் முன்சிபி, உள்ளிக்கோட்டையில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகம் அதற்காக அதன் சார்பதிவாளர்.

8. திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தாலுக்கா மற்றும் முன்சிபி, திருவாரூர் டவுனில் இயங்கி வரும் மாவட்ட ஆட்சியர், அலுவலகம் அதற்காக அதன் மாவட்ட ஆட்சியர்.

......2 முதல் 9 பிரதிவாதிகள்

இம்மனுவானது, கடந்த 01.09.2022 ம் தேதியன்று ஏற்பட்ட எதிரவரில்லா உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியில் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 10.11.2022

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 09.12.2022

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/1ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. பாண்டிதென்னவன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. கந்தசாமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. மனுதாரர்/1ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 7 பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ. 500/-ஐ செலுத்திவைக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)